## 2018 ஆவணி மாதத்திற்கான இறைவேண்டல் மற்றும் நடுநிலை செபத்திற்கான கைக்கொடுத்தல்

### *"வாழும் கடவுளின் கோவில் நாமே"*

(2கொரிந்தியர் 6:16)

விண்ணகத்தில் வீற்றிருக்கும் பரிசுத்தமான இறைவன் இறைமக்களுடன் வீற்றிருக்க எவ்வேளையிலும் ஆணத்தமாக இருக்கிறார் என்பதனை பழைய ஏற்பாடு யாத்திராகமம் அதாவது விடுதலைபயண நூலை வாசிக்கும்போது எமக்குத் தெளிவாக விளங்குகிறது. அன்று இஸ்ராயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்தை நோக்கிச் சென்ற பயணத்தில் இறைவன் பகல் வேளையில் மேகமாகவும் இரவு வேளையில் நெருப்புத்தூணாகவும் மென்காற்றாகவும் அவர்களுக்கு அருகிலிருந்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆபிரகாம் மற்றும் மோயீசன் மக்களுக்காக நடுநிலைவகித்து வேண்டுகையில் அவர்களோடு கதைத்ததாகவும் பல்வேறு இறைவாக்கினர் மூலமாகவும் ஆண்டவர் வெளிப்படுத்தப்பட்டுள்ளார்.

இன்றைய நற்செய்தியில் புனித பவுலடிகளார் இறைவனை வழிபடுகின்ற அவருக்கு கௌரவத்தை அச்சத்தை காட்டுகின்ற மக்களை இறைவனின் மாளிகையாக்கிக் கொண்டு அவர்களுடன் தங்கியிருப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார் என்பதனை நினைவுபடுத்துகின்றார். அப்படியாயின் எவ்வளவு தூரம் நாம் அவர் முன்னிலையில் தூயோராக மாசற்றோராக இருக்க வேண்டும்? அவ்வாறு இருக்க வேண்டுமாயின் இயேசுக்கிறிஸ்துவின் நடுநிலைவகித்தலும் தூயஆவியாரின் உதவியும் எங்களுக்கு அத்தியாவசியம். அதுவே எமது மனதினை, சரீரத்தை வீணடிக்கும் அனைத்தினின்றும் காத்து எம்மை பரிசுத்தப்படுத்தி தேவபயம் உள்ளவர்களாக எமது தூய்மை தன்மையைப் பூரணப்படுத்திட வேண்டும் என்பதனை புனித பவுலடிகளார் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறைவேண்டல் ஊழியர் என்றவகையில் இம்மாதம் முழுவதும் அகில உலக புபுது மக்கள் உள்ளாக அனைத்து கிறிஸ்தவ மக்களும் தேவபயத்துடன் வாழ்ந்து இறைவிருப்பத்திற்கு தலைசாய்த்தவாறு தூயோராக மாசற்றோராக வாழ்ந்திடத் தேவையான தூயஆவியின் வல்லமை வேண்டி செபிப்போம்.

"நாம் தூயோராகவும் மாசற்றோராகவும் தம் திருமுன் விளங்கும்படி உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார். அவர் நம்மை கிறிஸ்து இயேசுவின் மூலம் தமக்குச் சொந்தமான பிள்ளைகளாக்கிக் கொள்ள அன்பினால் முன்குறித்து வைத்தார்" (எபேசியர் 1:4-6)

**முதலாம் வாரம்:- தியான வாசிப்பு 2கொரிந்தியர் 6:16- 7:1**
வேண்டுதலுக்கான விசேட நோக்கு

ஆகில உலக புபுது மற்றும் கிறிஸ்தவ மக்களும் தேவபயத்துடன் கூடிய வாழ்வினை வாழ்ந்திட தேவையான தூயஆவியின் வல்லமை வேண்டி செபிப்போம். (10 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்:-

- சுவாமிஅப்பா, இறைவாக்கினர் குழு, துணையாளர் குழு, சுசுமத குழு உள்ளிட்ட புபுதுவையில் பொறுப்பாளர்களாக பணியாற்றும் அனைவருக்காகவும்.
- மாதத்தின் முதல் ஞாயிறு நடைபெறும் சங்கம குடும்ப தினத்திற்காக

- ஆவணி மாதம் 11-15ந் திகதிகளில் பிரசங்காராமயில் நடைபெறும் பேறுபெற்றதாயாரின் மற்றும் அருட்சாதனம் சம்பந்தமான ஞானஒடுக்கத்தில் கலந்து கொள்ளும் அனைவருக்காகவும் மற்றம் வார்த்தையின் ஊழியர்களுக்காகவும்.
- மது, போதைப்பொருள் உட்பட பயிர்ச்செய்கைக்கு உகந்ததல்லாத கிருமிநாசினி மற்றம் செய்கை சுவையூட்டி பாவனையினின்று எமது நாட்டு மக்களை காப்பாற்றிடவும் அவற்றை விநியோகம் செய்யும் வியாபாரிகள் மற்றும் இவ்வாறான கம்பனிகளின் பலம் உடைத்தெறியும் வண்ணம் சாத்தானை விரட்டிட ஆணையிட்டு செபிப்போம்.
- ஏனைய வேண்டுதல்கள்………

**இரண்டாம் வாரம்:- தியானவாசிப்பு 1கொரிந்தியர் 3:16-23**
வேண்டுதலுக்கான விசேட நோக்கு :-

ஆதிக கடன் சுமையினால், நோய்களால் மற்றும் போ'ாக்கான ஆகாரமின்றி துன்புறும் மக்கள் மற்றும் பாடசாலை செல்லாத பிள்ளைகளுக்காகவும் (10 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்:-

- ஆவணி மாதம் 17-18-19 திகதிகளில் சிலாபம் மாவட்டத்தில் புபுது பொறுப்பாளர்களுக்காக பாலக்குடா ரம்யாராமையில் நடைபெறும் ஞானஒடுக்கம் மற்றும் வார்த்தையின் ஊழியர்களுக்காக…….
- புபுது வாழ்க்கையினின்று விலகி இருக்கும் அனைவருக்காகவும்
- வெளிநாட்டு புபுது சங்கங்களுக்காக…..
- ஏனைய வேண்டுதல்கள்…..

**மூன்றாம் வாரம்:- தியானவாசிப்புஉ ரோமர் 8:18-27**
வேண்டுலுக்கான விசேட நோக்கு:-

இறைவேண்டல் துணையாளர் குழு மற்றும் இறை வேண்டல் குழுவில் தொடர்ப்பான அனைவருக்காகவும் (10 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்:-

- ஆவணி மாதம் 21-22 தினங்களில் பிரசங்காராமயில் நடைபெறும் வீரத்தாய்மாரின் ஞானஒடுக்கம் மற்றும் அதன் வார்த்தையின் ஊழியர்களுக்காக
- புபுது இளைஞர்ஃயுவதிஃ மாணவஃ மாணவிஃசிறுவர் பகுதிகளுக்காக
- பிரபோதய செயல் திட்டங்களுக்காகவும் மற்றும் பொறுப்பு வகிக்கும் அனைவருக்காகவும்
- ஏனைய வேண்டுதல்கள்……….

**நான்காம் வாரம் :- தியானவாசிப்பு–புனிதமத்தேயு 7:21-23**

வேண்டுதலுக்கான விசேட நோக்கு :- தேசத்திற்காக (20 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்:-

- யோசேப்வாஸ் வழிநடத்தல் சம்பந்தமாக அனகாரிக தூதுசேவையில் ஈடுபடும் அனைவருக்காகவும்
- பிரிந்து வாழும் குடும்பங்களுக்காக

- அநாதை மடங்களில் மற்றும் வயோதிபர் மடங்களில் இருக்கும் பிள்ளைகள் மற்றும் வயோதிபர்களுக்காக….
- சுபெந்தி சங்கத்துக்காக
- ஏனைய வேண்டுதல்கள்……

அறிவித்தல்

வெள்ளிக்கிழமைகளை செபம் மற்றும் தியான தினமாககழிக்கவும்.

*"கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது. ஆற்றல் வாய்ந்தது இருபக்கமும் வெட்டக்கூடிய எந்தவாளிலும் கூர்மையானது. ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது. எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறு ஊடுறுவுகிறது. உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது. படைப்பு எதுவும் கடவுளுடைய பார்வைக்கு மறைவாய் இல்லை. அவருடைய கண்களுக்கு முன் அனைத்து மறைவின்றி வெளிப்படையாய் இருக்கின்றன. நாம் அவருக்கேகணக்குக் கொடுக்க வேண்டும்."*

இறைவேண்டல் மற்றும் நடுநிலை சேவை